**பட்டுக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு. இரா. கோவிந்தராசு** எம்.ஏ.,எம்.ஏ.,பி.எட்.,

ந.க. 2184/2016/அ1 நாள்:27.07.2017.

பொருள்:பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி பணியாளர் தொகுதி - தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகு - பட்டுக்கோட்டை கோட்டம்- பேராவூரணி வட்டத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும்திரு.க.தாமரைச்செல்வன் த/பெ.கலைச்செல்வன் (லேட்)என்பவர் பணியினை பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது

பார்வை:
1. பட்டுக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:ந.க.3536/2013/அ1 நாள்: 30.08.2014
2. அரசாணை (நிலை) எண்:80 தொழிலளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ-1)த்துறை, நாள்: 02.03.2016.
3. தஞ்சாவூர், மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:ந.க.57140/2011/எஸ்1 நாள்: 28.06.2016.
4. பேராவூரணி வட்டாட்சியர் கடித எண்: ந.க.2902/2017/அ3 நாள்:18.07.2017
5. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்.

----------

**ஆணை:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை விரைவில் பணிவரன்முறை செய்திடும் பொருட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ( Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்திட சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களுக்கு ஆணையிடப்பட்டு பார்வை2-ல் காணும் அரசாணை வரப்பெற்றுள்ளது.

அதன்பேரில் பார்வை 3-ல் காணும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி பட்டுக்கோட்டை கோட்டத்தில் கருணை அடிப்படையில் 01.02.2016க்கு முன் கிராம நிர்வாக அலுவலராக நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்திட எந்தவித விதித்தளர்வு ( Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ( Exemption of Government Orders) தேவைப்படாத 10 கிராம நிர்வாக அலுவலர்களின் பணியினை வருவாய் கோட்ட அலுவலர் வரன்முறை செய்திட ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்பேரில் பார்வை 1-ல் காணும் பட்டுக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் செயல்முறையின்படி பேராவூரணி வட்டத்தில் கருணை அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்துவரும் திரு.க.தாமரைச்செல்வன் த/பெ. கலைச்செல்வன் என்பவரின் பணியினை அவர் பணியேற்ற நாளான 01.09.2014 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

வருவாய் கோட்ட அலுவலர்,
பட்டுக்கோட்டை.

பெறுநர்:

திரு.க.தாமரைச்செல்வன்
கிராம நிர்வாக அலுவலர்,
பேராவூரணி.

நகல்: மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது
நகல்: வட்டாட்சியர், பேராவூரணி. (தனியரின் பணிப் பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள)